Registered as a Newspaper

பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 275

செவ்வாய்க்கிழமை
27 ஓகஸ்ட் 2024

ஆவணி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"வாக்குறுதியள் முக்கியமில்ல, செயல்தான் முக்கியம் கண்டியளோ"

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கம்

அரசியல் கைதிகள் விடுதலை

நிர்வாக அதிகாரங்கள் பகிர்வு

நல்லிணக்கச் செயற்பாட்டை விரிவாக்கல்

வடக்கு - கிழக்கு படுகொலை, ஆட்கடத்தல், காணாமல் ஆக்கப்படல் தொடர்பில் நீதி நிலைநாட்டல்

வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகம் உறுதி செய்யப்படும்

# இனப்பரம்பலை மாற்றுகின்ற குடியேற்றங்களுக்குத் தடை

## வடக்கு - கிழக்கின் நலன்களுக்கும் அநுர கணிசமான முக்கியத்துவம்



கொழும்பு, ஓகஸ்ட் 27

நாட்டுக்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்பு கொள்ளக் கூடியவாறு ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்துக்கும், மாவட்டத்துக்கும் மற்றும் மாகாணத்துக்கும் அரசியல் ரீதியானதும் நிர்வாக ரீதியானதுமான அதிகாரத்தை பகிர்ந்தளிக்கின்ற அரசாளுகைக்கான, அனைத்து இனத்தவர்களினதும் அரசியல் பங்காண்மையை உறுதிசெய்கின்ற புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் எனவும் புதிய அரசமைப்பு சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்றப்படும் என்றும் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

## நல்லாட்சிக் காலத்தில் தயாரித்த அரசமைப்பை நிறைவேற்றுவோம்!

### தேர்தல் அறிக்கையை வெளியிட்டு அநுரகுமார திஸாநாயக்க உரை

கொழும்பு, ஓக. 27

2015 - 19 நல்லாட்சி காலப்பகுதியில் மற்றவர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து அரசமைப்பொன்றை உருவாக்குவதற்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆனால் அது இடைநடுவில் செயலற்றுப்போயுள்ளது. நாங்கள் அந்தச் செயற்பாட்டை விரை

11

## கொழும்புத் துறைமுகத்தில் 3 சீனப் போர்க்கப்பல்கள்!

### பிராந்தியப் பதற்றம் உச்சம்

கொழும்பு, ஓக. 27

இந்தியப் போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள சமநேரத்தில், சீனாவின் மூன்று போர்க் கப்பல்களும் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன.

12

## சுவிஸிலிருந்து வந்தவர் வவுனியாவில் கொலை

வவுனியா, ஓக. 27

சுவிஸிலிருந்து வருகைதந்த குடும்பத்தலைவர் வவுனியாவில் உள்ள வீடொன்றில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். செல்லத்துரை விமலநாதன் (வயது-66) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

12

## விபத்தில் முதியவர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ்ப்பாணம், இருபாலை கிழக்குப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மார்க்கண்டு பாலசுப்பிரமணியம்

12

எம்.பி.க்களுக்கான ஓய்வூதியம்; வாகன 'பெர்மிட்' இல்லை

பொறுப்பை நிறைவேற்றாத எம்.பி.க்களை மீள அழைக்கலாம்

புலம்பெயரிகளும் வாக்களிக்கலாம்

## நிறைவேற்று அதிகாரம் நிச்சயம் ஒழிக்கப்படும்

### தேர்தல் விஞ்ஞாபனத்தில் தே.ம.ச. வாக்குறுதி

கொழும்பு, ஓக. 27

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்படும் என்ற உறுதிமொழி அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது.

11

குடும்பத் தகராறு:

## தீக்காயங்களுடன் பெண் மருத்துவமனையில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

அச்சுவேலியில் 28 வயதுடைய குடும்பப் பெண் ஒருவர் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். குடும்பப் பிரச்சினை காரணமாக இந்த

11

## ஓட்டோ விபத்தில் நபரொருவர் சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ்ப்பாணம் - பிறவுண் வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில், சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பத்மநாதன் ஐங்கரன் (வயது-50) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

11

## வளர்ப்புநாய் கடித்ததில் வயோதிபப் பெண் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 27

வளர்ப்பு நாய் கடித்ததில் வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மகேந்திரன் சாந்தி (வயது-62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்

11

## தமிழ்ப் பொதுவேட்பாளரின் தேர்தல் அறிக்கை விரைவில்

யாழ்ப்பாணம், ஓக. 27

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் சார்பில் களமிறக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் முக்கியமான கூட்டம் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

தென்னிலங்கையில் இருந்து

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் மீதான வன்முறைக்கு உடனடி நடவடிக்கை தேவை

## யாழ்.பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், ஓக. 27**

**பிரதேச செயலகங்களுக்குக் கிடைக்கப்பெறும் சிறுவர் முறைப்பாடுகள் தொடர்பாக பிரதேச செயலர்கள் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று யாழ். பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.**


யாழ். மாவட்ட மட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் 2 ஆவது காலாண்டுக்குரிய குழுக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பதில் மாவட்டச் செயலர்,

பிரதேச செயலகங்களுக்குக் கிடைக்கப்பெறும் சிறுவர் முறைப்பாடுகள் தொடர்பாக பிரதேச செயலர்கள் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

இதுகுறித்து எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடி ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்னதாக மாவட்டச் செயலகத்துக்கு அறிக்கையிடவேண்டும் - என்றார்.

மேலும் பாடசாலை இடைவிலகல் மற்றும் மீளிணைப்புச் செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற்றுக்கொடுத்தல், பிரதேசமட்ட சிறுவர், பெண்கள் முறைப்பாடுகள், தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகள், பாடசாலை பஸ்சேவை போன்ற விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (ச-27)



# தேர்தல் கடமை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.27

ஜனாதிபதித் தேர்தலில் தபால்மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடல் மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலில் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

இதன்போது உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ், பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-25,9,13)

# உவர்ப் பரம்பலை தடுக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக.27

பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல்லவராயன்கட்டுக் கிராமத்தில் ஏற்பட்டுவரும் உவர்ப் பரம்பலைத் தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் உவர்ப்பரம்பல் காரணமாக வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

கடந்த காலங்களில் 10 ஆம் கட்டைக்கும் முக்கொம்பனுக்கும் இடையில் உவரடைந்த நிலப்பரப்புகளின் மேல் அமைத்த மண் அணைகளில் சவுக்கு மரக்கன்றுகளை நட்டு மழை நீரினை சேமித்து உவர் நிலப்பரப்பை நன்னிலமாக மாற்றும் திட்டம் வெற்றியடைந்துள்ளது.

அதேபோன்று பல்லவராயன்கட்டுக் கிராமத்தையும் நன்னிலமாக மாற்றும் நடவடிக்கையை மாவட்டச் செயலகம் மேற்கொள்ள வேண்டும் என பல்லவராயன்கட்டு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25. 13)

# உறவுகளுக்கு நடந்தது என்ன? அரசாங்கம் பொறுப்புக்கூறுக

## நாடாளுமன்றில் செல்வம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 27

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் அரசு பொறுப்புகூறியாகவேண்டும். எமது மக்கள் நீதியை எதிர்பார்க்கின்றனரே தவிர நிதிக்காக காத்திருக்கவில்லை.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினல் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமது கண் முன்னாலேயே ஒப்படைக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். வருடக்கணக்கில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வளாகத்திலும் போராட்டம் நடத்தினர். அவர்கள் கண்ணீருக்கு அரசாங்கம் பதில் கூறவேண்டும். உங்கள் மனங்களில் ஈரம் கசிய வேண்டும்.

எனவே காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் பொறுப்புக்கூறல் அவசியம் - என்றார். (ச-44)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக.27

தமிழ் ஆசிரியை ஜீவரஞ்சினி விவேகானந்தராசாவின் ஓராண்டு நினைவு ஞாபகார்த்தமாக மாணவர் படைப்பிலக்கிய, திறந்த போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா அறக்கட்டளையின் பொருளாளர் அதிபர் திருமதி ஜெயா மாணிக்கவாசகன் தலைமையில் கிளிநொச்சி திறன் விருத்தி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது சா. தாருகா, தி. தியந்தினி, சிவ. டிலக்சி, கி. நிருஷனா, சி. ஆருஷன், இ. நிலக்சனா, ப. மதீசா, ச. அன்சுருதிகா, து. தக்சனா, தமயந்தி, தர்சன், ரேவதி யோகலிங்கம் ஆகியோருக்கு பணப்பரிசில் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ச-25,13)



# கருத்தமர்வு

சாவகச்சேரி ஓக. 27

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள பத்து கிராமிய பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு விசேட இலவச பயிற்சிக் கருத்தமர்வு, தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகு மற்றும் சமுர்த்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி- 9)





குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கிராம ஊர்வலம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது.

அலங்கரிக்கப்பட்ட சிறியரக உழவியந்திரத்தில் கிராமம் முழுவதும் விநாயகப் பெருமான் வீதி உலாவாகச் சென்று கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் ஆலயத்தைச் சென்றடைந்தார். (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்த் திருவிழாவின் 19 ஆம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர்க்கந்த சுவாமி தேவஸ்தான வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இன்று 19ஆம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, சாவகச்சேரி சப்பச்சி மாவடிப்பிள்ளையார் கோவில் பிரதம குரு முதுகலைமாணி பிரம்மஸ்ரீ பரமானந்தக்குருக்கள் சனாதன சர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பாலசுப்பிரமணியம் தனபாலன், கௌரவ அதிதியாக தமிழ்நாடு சிவப்பணிச் செம்மல், முனைவர் வே.சங்கரநாராயணன், சிறப்பு அதிதியாக சாவகச்சேரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இராமநாதன் சர்வேந்திரன் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ஜெயஸ்ரீ சிவகனந்தராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நுணாவில் ஸ்ரீ வீரபத்திரர் ஆலய அறநெறிப் பாடசாலை, சாவகச்சேரி பழனி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை, அல்லாரை அறுகம்புலம் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக அல்லாரை அறுகம்புலம் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் பக்தி இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (எ-45)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக.27

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையைத் தொடர்ந்து, சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ. த. குமரன் 'அறம் செய்ய விரும்பு' எனும் தொனிப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பொழிவில் இருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-ரி)

++++

யாழ்ப்பாணம், ஓக.27

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 20 பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் த. மனோஜ்குமார் 'மாணிக்கவாசகரும் திருப்பள்ளியெழுச்சியும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-ரி)



## கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஓக.27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகள் எதிர்வரும் செப்ரெம்பர் 2ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளன. இணுவில்தமிழ்சங்க பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. (எ-45)

## நயினை - நல்லூர் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஓக.27

நயினை - நல்லூர் திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை வைர விழா நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப 2மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (எ45)

## பண்ணிசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.27

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க்கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழாவின் 'அருணகிரிநாதர் உற்சவத்தை' முன்னிட்டு நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடலின் ஏற்பாட்டில், சங்கீத விற்பன்னர் திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் மற்றும் அவரது மாணவர்களால் திருப்புகழ் பண்ணிசை நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்தப்பட்டது. (எ-25,66)




## சேயாக வருவோர்க்கு தாயாகி அருள்வாய்

எடுப்பு
இன்னமும் உன் மனம் வன்மனமோ? இந்த
ஏழையின் வாழ்வெல்லாம் துன்ப வனமோ?

(இன்னமும்)

தொடுப்பு

பொன்னெழில் திருத்தேரில் வருபவனே - பூம்
பொழுதென அருள் ஒளியை தருபவனே
(இன்னமும்)

முடிப்பு

மின்னலின் ஒளிக்கீற்றாய் வேல் உண்டு - செயல்
வீரமும் ஈராறு கரமும் கொண்டு
இன்னல்கள் களைவாயே ஈசன் மகனே - உன்
இணையடி தொழுகின்றோம் எழில் குகனே

(இன்னமும்)

அண்ணலே உன் பாதம் அபயம் என்று - உனை
அண்டிவரும் அன்பர் துயர் வென்று
தண்ணருள் புரிவதில் நீ தாயல்லவா நல்லூர்
சன்னிதி சரணடைந்தேன் சேயல்லவா

(இன்னமும்)

தமிழுக்கு நீ பெருந் தலைவன் அன்றோ உந்தன்
தமிழினம் துன்பத்தில் உழல்தல் நன்றோ
அமுதான பேரருளை தருவாயே - பக்த
அடியவர் குறைதீர்க்க வருவாயே

(இன்னமும்)

■ஆனையூர்க்கவிராயர்

## சூர சம்ஹாரா உன் பாதம் சரணடைந்தோம்

'அலங்கார நல்லூரான் அடியவர் வினையகற்றும்
ஆல முண்ட நீல கண்டன் மைந்தனே - நிதம்
இரு பாவையர்கள் புடை சூழ இபமாமுகன்
ஈடிணையற்ற தம்பியென - நல்லூரில்
உமையவள் பாலனாய் அழகு
தமிழ்த் தெய்வமென - சித்தர் நடந்த
நல்லை வீதியில் நித்தம் வருகின்ற சிங்கார வேலா
சூரசம்ஹாரா உன் பாதம் சரணடைந்தோம்'

■ப.பாலசுப்பிரமணியம்

நல்வழி காட்டிடு கந்தா
நல்லூரான் உன்னடியை நாளும் துதிக்கின்றோம்
தொல்லைகள் நீங்கிடத் தோள்கொடுப்பாய் எல்லையில்
பொல்லா வநீதி புரிந்திடும் தீயோரை
வெல்லும் வழியில் விழி
சரித்திரம் கண்ட சங்கிலி மண்ணில்
தரித்திரம் நீங்காத் தலைகள் நரிக்குணம்
கொண்டே தமிழைக்
குழியிற் புதைக்காது
மண்ணில் அவர்மனதை மாற்று

■மரபொளிர் கவிஞர் ஆ. த குணத்திலகம் சில்லாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

சாவகச்சேரி அருள்மிகு தான்தோன்றி வாரிவன நாதர் சுவாமி சமேத அமிர்த பாவினி அம்பாள் உடனுறை சிவன் ஆலய அமிர்தபாவினி தாயா ரின் வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழா வும், 5ஆம்திகதிவியாழக்கிழமைதீர்த்தோற்சவமும் இடம்பெறும் என்று ஆலய தர்மகர்த்தா தெரிவித் தார். (ஏ-ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழி உறவுகள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**இடபம்:** பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாக முடியும். தாய்வழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் நாள்.

**கடகம்:** பிள்ளைகள் வகையில் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். இளைய சகோதரர்களால் ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். கணவன் – மனைவிக்கி டையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** தெய்வ அருளால் குறை தீரும் நாள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். செல்வாக்கு உயரும். தடைகளைச் சந்திக்கும் நாள். அலைச்சல் அதிகரித்து உடல் சோர்வடையும். நீங்கள் மேற் கொள்ளும் முயற்சியில் லாபம் காண்பீர்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப் பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. சிலருக்கு நண்பர்கள் மூலம் பணவரவு உண்டு.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத் துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிகள் உண்டாகும்.

**மகரம்:** பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திக்குமுக்காட வைக்கும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழு பறியாகும். அவர்களுடன் மன வருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**கும்பம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்க ளுக்காக செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபடவேண்டாம்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு சகோதரர்கள் மூலம் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். மூன்றா வது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும்.

# சீரான பஸ் சேவை இன்றி தேவிபுரம் மக்கள் அந்தரிப்பு

முல்லைத்தீவு, ஓக.27

**புதுக்குடியிருப்பு, தேவிபுரம் கிராமத்துக்குச் சீரான பேருந்து சேவையின்றி அவதிப்படுவதாக கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

இந்தக் கிராமத்தில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத் தில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் மருத்துவமனைக்கு செல்வதற்கு பேருந்து சேவை இல்லை.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, உடையார்கட்டு மகாவித்தியாலயம் என்பவற்றுக்கு உயர்தர வகுப்பு களுக்காகச் செல்லும் மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்கின்றனர் என்றும் அவர் கள் சுட்டிக்காட்டினர்.

பேருந்து சேவை தொடர்பில் உரிய அதிகாரிகளிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் இதுவரை நிறைவேற் றப்படவில்லை என்றும், போக்குவரத்துச் சேவையை நடத்த ஆவன செய்யவேண்டும் என்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஏ-25-13)

## முழுமைபெறாத திட்டத்தால் வெள்ளம் ஏற்படும் அபாயம்!

முல்லைத்தீவு, ஓக.27

முல்லைத்தீவு தேராவில் குளத்தில் இருந்து நீரை வெளியேற்றும் வேலைத் திட்டம் முழுமை பெறாமல் உள்ளமையால் மழைக் காலத்தில் வெள்ள அபாயம் ஏற்பட வாய்ப்புள் ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தேராவில் கமக்கார அமைப் பினர் தெரிவித்துள்ளதாவது:-

ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் வாய்க்கால் அமைத்து குளத்தில் இருந்து நீரை அகற்று வதற்கான திட்டம் வரையப்பட்டிருந்த போதி லும் வாய்க்கால் அமைக்கப்படும் பகுதியில் உள்ள மரங்களை அழிப்பது தொடர்பான அனுமதி வனவளத் திணைக்களத்தால் வழங் கப்படவில்லை.

சுமார் 50 வரையான சிறிய மரங்களை அழித்தே வாய்க்கால் அமைக்கப்பட வேண்டி யுள்ளது.

அதற்கான அனுமதி கிடைக்காததால் வேலை கள் முழுமை பெறவில்லை. இந்தத் திட்டம் விரைவாக நிறைவு செய்யப்படாவிட்டால் மழைகாலத்தில் குளம் நிரம்பி நீர் வழிந்தோட முடியாமல் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்ற நிலைமை உருவாகும் என்றனர். (ஏ-25-13)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஓக.27

அமரர். சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையின் 15 ஆவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டுக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு அல்வாயில் அமைந்துள்ள கணபதி அறக்கட்டளை அலுவ லக மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்க ளையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர் கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ஏ-45-66)

## குடமுழுக்கு

கிளிநொச்சி, ஓக.27

கிளிநொச்சி 3ஆம் வாய்க்கால் பன்னங்கண்டி திருவருள்மிகு பன்னங்கண்டிப் பிள்ளையார் ஆலய புனருத்தாபன அஷ்டபந்தன மஹா கும் பாபிஷேக பெருவிழா எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.49 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற வுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரி வித்தனர். (ஏ-ரி)

## சித்திரக்கண்காட்சி

கிளிநொச்சி, ஓக.27

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் இளைஞர், யுவதிகளின் கைவண்ணத்தில் உருவான சித்திரங்களின் கண்காட்சி கிளி நொச்சி டிப்போச் சந்தியில் நேற்று மு.ப 10 மணிக்கு இடம்பெற்றது.

கண்காட்சியில் வடமாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களின் காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகளின் சித்திரங்கள் காட்சிப் படுத்தப்பட்டதுடன் மூவின இளைஞர் யுவதிக ளும் பங்குபற்றினர். (ஏ-45-113)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# இராஜதந்திரமா? மரணப்பொறியா?

இலங்கையில் கடந்த ஒரு வாரத்துக்குள் அமெரிக்கா,சீனா,இந்தியா ஆகிய நாடுகளின் போர்க் கப்பல்கள் நங்கூரமிட்டிருக்கின்றன. இதன் உச்சக் கட்டமாக, இந்தியப் போர்க் கப்பல் இலங்கையில் நங்கூரமிட்டிருக்கும் சமநேரத்தில், சீனத்தின் மூன்று போர்க் கப்பல்களை நேற்று வரவேற்றிருக்கின்றது கொழும்பு. எரிபொருள் மீள்நிரப்பல், மாலுமிகளுக்கான ஓய்வு மற்றும் இருதரப்பு நட்புறவு என்று பல காரணங்களை இந்தக் கப்பல்களின் அணிவகுப்பின் பின்னால் அடுக்கிக்கொண்டு சென்றாலும், இவற்றுக்கு அப்பாற்பட்டு இராஜதந்திர நெருக்கடிகளும் இதில் செல்வாக்குச் செலுத்து கின்றன என்றால், அதில் இரண்டாம் கருத்தில்லை.

ஜென்மத்துப் பகையாளிகளை ஒரேபந்தியில் அமரவைத்து உணவுபரிமாறி நலம் விசாரித்து வழியனுப்பி வைப்பதென்பது ஒரு கலை. அந்தக் கலை அனைவருக்கும் வாய்க்காது. உண்மையில் இது உச்சக்கட்ட இராஜதந்திரமும்கூட. இந்த இராஜ தந்திரத்தைத்தான் மிக நேர்த்தியாகவும் இலாவகமா கவும் அண்மைய நாள்களாகச் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றது கொழும்பு. உலகின் ஆகப் பெரும் வல்லாதிக்கச் சக்திகளை, 'ஒரு மாலை நேரத்துத் தேநீர்போல்' அவ்வளவு இலாவகமாகவும், மிகமிகச் சாதுரியமாகவும் கொழும்பு கையாண்ட பாங்கு, அதன் துறைமுகங்களில் இந்தவாரம் வலுவாகவே பட்டவர்த்தனமாகி இருக்கின்றது.

ஆனால், டைட்டானிக்கை மூழ்கடித்த பனிப் பாறை போன்று, கொழும்பின் இந்த இராஜதந்தி ரங்களுக்குப் பின்னால் ஆழமான ஆபத்துகள் ஒளிந் திருப்பதையும் மறுப்பதற்கில்லை. ஏனெனில், இன்று உலகளாவிய போர்களில் கடற்பதற்றங்களும் பிரதான காரணமாகவே உள்ளன. கடற்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் கடந்த பத்து ஆண்டுகளில் சீனா காட்டும் வளர்ச்சி மிகப்பெரியது. அமெரிக்காவால் கூட சீனத்தின் இந்த வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடிய வில்லை. இதனால்தான் சீனாவுடன் முரண்பட்டுக் கொள்ளும் நாடுகளின் கடற்படைகளுக்கு தாராளப் பிரபுவாக ஆயுதங்களை வாரி இறைத்துக் கொண்டிருக் கின்றது அமெரிக்கா. இப்போதும்கூட அமெரிக்கத் தலைநகர் வொஷிங்டனுக்குச் சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம், இந்தியக் கடற்படைக்குத் தேவையான அதிநவீன ஆயுதங்களை விற்பதற்கு இணக்கியிருக்கின்றது அமெரிக்கா.

இவ்வாறானதொரு பின்னணியில் 'எரிதணல் நிலையில்' இலங்கைத் துறைமுகங்களை வல்லரசு களால் இலகுவாகக் கையாளக்கூடிய ஏதுநிலைகளை ஏற்படுத்துவதானது, மரணப் பொறியை நோக்கி நடைபோடும் காரியமாகவும் அமைந்துவிடும். சிங்கப்பூரும் தன் துறைமுகங்களில் தாராளக் கொள்கையைக் கடைப்பிடிக்கவே செய்கின்றது. ஆனால், வல்லாதிக்கச் சக்திகளுக்குள் அகப்பட்டு அமிழ்ந்துபோகும் நிலையில் சிங்கப்பூர் இன்றில்லை. அவ்வாறான நிலையை சிங்கப்பூர் கடந்து கனகாலம். அதன் பொருளாதாரமோ இன்று மிகப்பெரியது. ஆனால், இலங்கையின் இன்றைய நிலையோ மிகப் பரிதாபகரமானது. இராஜதந்திர விளையாட்டு களுக்கு முன்னர், தான் வைத்திருக்கும் கடன்கள் மற்றும் நம்பியிருக்கும் பெருஉதவிகள் தொடர்பில் கொழும்பு சிந்திக்கவேண்டியது மிக அவசரமும் அவசியமுமாகும்.




# தபால் வாக்களிப்பு வாக்குச்சீட்டு பொதிகள் ஏற்கும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஓக.27

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்காளர்களுக்கு முக வரியிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட தபால் மூல வாக்குச் சீட்டுகள் அடங்கிய பாதுகாக்கப்பட்ட பொதிகளை ஏற்றுக்கொள்ளும் பணி நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது என தபால் திணைக்களம் தெரி வித்துள்ளது.

வாக்காளர் அட்டை விநியோகம் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும், செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி அதற்கான சிறப்பு நாளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் காரணமாக ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை உடனடியாக நடை முறைக்குவரும்வகையில் தபால் திணைக்களத் தின் அனைத்து ஊழியர்களின் விடுமுறையும் இரத்துச்செய்யப்பட்டுள்ளது என்று பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார். (எ-இ)

# தேர்தல் காலப்பகுதியில் விழிப்புணர்வு மையம்!

கொழும்பு, ஓக.27

தேர்தல் கால ஊடக கண்காணிப்பு மற்றும் வாக்காளர் விழிப்புணர்வு மையம் ஒன்று இவ்வாரம் ஆரம்பிக்கப்பட வுள்ளது. இந்த நிறுவனத்தின் போஷகர் ரியூடோர் வீரசிங்க ஊடக நிபுணர்கள்,கல்வியியலாளர்கள் உட்பட தேர்தல் திணைக்கள அதிகாரிகளை இவ்வாரம் சந்திக்கவுள்ளார். இந்த சந்திப்பின் போது சிறந்த முறையில் ஜனாதிபதி தேர் தலை வெற்றிகரமாக நடத்துவதற்குரிய வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்படவுள்ளன.

ஒழுக்கமான அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதுடன் ஊடக ஒழுக்கத்தை ஊடக வெளிப்பாடுகளில் வலியுறுத்து வதே தமது நோக்கம் என ரியூடோர் வீரசிங்க தெரிவித்துள் ளார். (எ-25,6)

# பாடசாலைகள் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஓக.27

அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனி யார் பாடசாலைகளின் மூன் றாம் தவணைக் கற்பித்தல் நட வடிக்கைகள் நேற்று ஆரம்பமா கின. இரண்டாம் தவணை கடந்த வெள்ளிக்கிழமை 16 ஆம் திகதி நிறைவடைந்தது என்றும், மூன் றாம் தவணையின் முதல் கட் டம் இன்று முதல் நவம்பர் 22 ஆம் திகதி வரை நடைபெறவுள் ளது என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# பந்துலவின் கடனட்டையில் ரூ. 200,000 மோசடி

ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்த னவின் கடன் அட்டையை தனது சொந்தத் தேவைக்குப் பாவித்தார் என ஊடக அமைச்சின் செயலாளர் மகேஷ் விக்கிரம மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அமைச்சின் கடனட்டையைப் பயன் படுத்தி இரண்டு இலட்சம் ரூபா பெறும தியான இன்சூரன்ஸ் கொடுப்பனவு மற்றும் மருத்துவக்கொடுப்பனவுகளை மேற்கொண்டதாக அவர் மீது குற்றஞ்சாட் டப்பட்டுள்ளது. (எ-25-6)

# 'ஹெலிக்குத்' தடை

கொழும்பு, ஓக.27

தேர்தல் கூட்டங்கள் மற்றும் பரப்புரை நடவடிக்கைக ளில் கலந்துகொள்வதற்காக அரச செலவில் உலங் குவானூர்திகளைப் பயன்படுத்தத் தடை விதிக்கப் பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறி வித்துள்ளது. அரசாங்கத்துக்குச் சொந்தமான உலங்குவானூர்திகள் பயன்படுத்தப்படுமாயின் அதற்குக் கட்டணம் செலுத்தப்படவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித் துள்ளார். தேர்தல் கடமை அல்லாத வேறு நடவடிக் கைகளுக்கு அரசாங்கத்தின் உலங்குவானூர்திக ளைப் பயன்படுத்த எந்தத் தடையும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## நாளை

28.08.2024

புதன்கிழமை - ஆவணி - 12

சுபநேரம் : 04.35 - 06.05


ராகுகாலம் : 12.05 - 01.35

## நாளொரு நல்வார்த்தை

வெற்றி ஒரு மோசமான ஆசிரியர். அது புத்திசாலிகளையும் மயக்கி தோல்வியே நமக்கு இல்லை என நினைக்க வைத்து விடும்.

-பில் கேட்ஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கைத் தேர்தல் களம்

# ரணிலின் வெற்றியை விரும்பும் மேற்குலகம்?

■ மௌனம் காக்கும் இந்தியா

யாழ்ப்பாணம், ஓக.27

**இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மேற்குலக நாடுகளும், ஆசிய பிராந்தியமும் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களில் அறியமுடிகிறது.**

ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியாவின் ஆதிக்கம் பல நாடுகளில் நிலவுகிறது. இலங்கையில் அரசியலிலும் கடந்த பல தசாப்தங்களாக இந்த மூன்று நாடுகளின் ஆதிக்கமே நிலவுகிறது.

சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் அவர்களுக்குச் சார்பான ஒருவரை ஜனாதிபதியாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. குறிப்பாக ஆசிய பிராந்திய நாடுகளும் மேற்குலக நாடுகளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் நீடிப்பதை விரும்புகின்றன. அமெரிக்கா ரணிலின் ஆட்சி தொடர்பில் திருப்தியற்ற நிலையில் இருப்பதாகவும் அமெரிக்காவின் பல்வேறு நகர்வுகளுக்கு ரணில் ஆதரவான நிலைப்பாட்டில் இல்லையென்றும் தெரியவருகிறது.

அதேபோன்று ஆசிய பிராந்தியத்தில் சீனா ரணிலின் ஆட்சிக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதுடன், இந்தியா மௌனம் காத்து வருகிறது.

எனினும் ஆசிய பிராந்தியத்தில் பலமான நாடுகளாக உள்ள ஜப்பான், தென்கொரியா, சிங்கப்பூர், மலேசியா, அரபு நாடுகள் மற்றும் மேற்காசிய நாடுகள் ரணிலுடன் சுமுகமாக உறவை கொண்டுள்ளதால் சமகால ஆட்சியின் நீட்சியை இந்த நாடுகள் விரும்புகின்றன என்றும் அறியவருகின்றது. (ச)

# சர்வதேச சமூகம் சஜித்தை ஏற்கும்!

*லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.27

சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய அரசாங்கத்தை சர்வதேச சமூகம் வரவேற்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன அரசாங்கம் நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்தது. அந்தக் கட்சியின் கொள்கைகளைப் பற்றி இனிப் பேசுவதில் பயனில்லை.

அதேபோன்று தேசிய மக்கள் சக்தியின் பொருளாதார தத்துவமானது சர்வதேச நாணயநிதியத்துக்கும் உலக வங்கிக்கும் எதிரானதாகும். சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதும் சர்வதேச சமூகம் சஜித் பிரேமதாஸவுக்கு உதவ முன்வரும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-சி)

# விஜயதாஸ கூட்டத்தில் ‘பவர் கட்’

கொழும்பு, ஓக.27

ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ச அத்தனகல்ல பிரதேசத்தில் நடத்திய பரப்புரைக் கூட்டத்தின்போது மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

பரப்புரைக் கூட்ட நிகழ்வில் விஜயதாஸ ராஜபக்சவை உரையாற்ற அழைத்த சந்தர்ப்பத்திலேயே மின் தடைப்பட்டுள்ளது.

அதன்பின்னர் ஏற்பாட்டாளர்களால் ஜெனரேற்றர் எடுத்துவந்து மின்னிணைப்பை ஏற்படுத்திய பின்னரே அவர் உரையாற்றினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-சி)

# தமிழ்ப் பொதுவேட்பாளரால் பதறும் தென்னிலங்கை

ரெலோ சுட்டிக்காட்டு

தமிழ் பொதுவேட்பாளரால் தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களுக்கு கடும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது. இதனால் தொடர்ச்சியாக பேச்சுக்கு அழைக்கிறார்கள். நாம் அவர்களுடன் பேசுவோம் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுவேட்பாளர் இல்லாத நிலையில் நடத்தப்படுகின்ற பேச்சு என்பது வலிந்து சென்று அவர்களிடம் கையேந்துவது போன்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தும். பொதுவேட்பாளரை களமிறக்கியுள்ளதால் தெற்கு வேட்பாளர்களிடையே அழுத்தம் ஏற்பட்டுள்ளது. தெற்கில் இருக்கக் கூடிய வாக்குகள் சமமாகப் பிரிந்து செல்கின்றபோது பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் அதிகபட்ச வாக்குகளை வழங்கினால் தங்களுக்கு இரண்டாவது கணக்கீட்டில் கூட வெற்றி இல்லாத நிலை வரலாம் என அவர்கள் உணர்கிறார்கள்.

ஆகவே, பொதுவேட்பாளரை களமிறக்கிய பின் உறுதியான நிலைமை வெற்றியளித்துள்ளது. இதற்குப் பின்னர் அவர்களுடைய அழைப்புகள் இதனால் பலமான நிலையில் இருந்து எமதுகோரிக்கைகளைமுன்வைக்க முடியும் - என்றார். (ச-18)

# அத்தியாவசிய மருந்துகள் இந்தியாவிடம் கொள்வனவு

யாழ்ப்பாணம், ஓக.27

அவசரமாக மருந்து வகைகள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அத்தியாவசிய மருந்துகளை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை இந்திய சுகாதார அமைச்சுடன் செய்து கொள்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

சுகாதார அமைச்சரின் கூற்றுப்படி 862 வகையான மருந்துகள் சுகாதார அமைச்சால் பட்டியலிடப்பட்டுள்ளன.

இவற்றில் 14 வகையான மருந்துகள் உயிர் காக்கும் மருந்துகள். 474 வகையான மருந்துகள் அத்தியாவசியமான மருந்துகள் எனப் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானம் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்ததும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ச-6)

# விசேட செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக.27

‘நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான மக்கள் ஒன்றிணைவு’எனும் தொனிப்பொருளில் தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் நிலைமாறுகால நீதி தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிகாரிகளுக்கு விசேட செயலமர்வு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது. இந்தச் செயலமர்வானது நிலைமாறுகால நீதி தொடர்பில், அதன் முக்கியத்துவம், தேவை, பரிந்துரைக்கவேண்டிய விடயங்கள் தொடர்பிலும் ஒரு தெளிவான விளக்க அறிவை அரச அதிகாரிகளுக்கு ஏற்படுத்துவதன் மூலம் மக்களுக்குச் சென்றடையும்நோக்கில்நடைபெற்றது. (ச-45-13)



# சமத்துவக்கட்சியின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.27

ஜனாதிபதித் தேர்தலில் சமத்துவக்கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கட்சி உறுப்பினர்களிடையே கருத்தறியும் சந்திப்புகள் இடம்பெறுகின்றன. அந்தவகையில் சமத்துவக் கட்சியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களின் உறுப்பினர்களுக்கும் கட்சியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார் மற்றும் கட்சியின் தவிசாளர் சு. மனோகரன், மாவட்ட அமைப்பாளர் வேங்கை ஆகியோருக்கும் இடையே கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-25-13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை முன்னிறுத்தி வாக்குக் கேட்கும் பெரமுன

- கொழும்பு, ஓக.27

**ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 25 நாள்களே எஞ்சியுள்ள நிலையில், தென்னிலங்கையில் உள்ள பிரதான கட்சிகள் தீவிர பரப்புரைகளில் ஈடுபட்டுவருகின்றன. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை காட்சிப்படுத்தியும், புலிப்புராணம் பாடியும் வாக்கு வேட்டை நடத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.**

நாமலுக்கு ஆதரவு திரட்டி நடைபெறும் பிரதான கூட்டங்களில் மஹிந்த பங்கேற்றுவருகின்றார். எனினும், அவர் உரையாற்றுவதில்லை. போரை முடித்த தலைவர் இங்கிருக்கின்றார் எனக் கூறி பிரசாரம் செய்யப்படுகின்றது.

அதேபோல நாடாளுமன்ற உறுப்பினர்களான டீ. வீரசிங்க, திஸ்ஸ குட்டியாராச்சி மற்றும் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் ஆகியோர் புலிகள் பற்றியும், புலம்பெயர் தமிழர்கள் குறித்தும் அதிகம் உரையாற்றி வருகின்றனர். கேணல் கடாபியை கொலை செய்ததுபோல் புலம்பெயர் புலி ஆதரவாளர்கள், மஹிந்தவை கொலை செய்வதற்கு மே 9 ஆம் திகதி நிதி உதவி செய்தனர் என இத்தேகந்த தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாமல் ராஜபக்ச புலிகளை பெயர் கூறி விளிக்காவிட்டாலும் ஒற்றையாட்சி, காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் பற்றி எல்லா மேடைகளிலும் பேசிவருகின்றார். தமது அணிக்கான ஆதரவு குறைந்து வரும் நிலையில், சிங்கள-பௌத்த மக்களின் வாக்கு வங்கியை தக்கவைத்துக்கொள்வதற்காகவே இப்படியான பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. (எ-44)

## கஞ்சா பயிரிடுவதற்கு 30 விண்ணப்பங்கள்!

கொழும்பு, ஓக.27

கஞ்சா பயிரிடுவதற்கு 30 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கஞ்சா பயிரிடுவதற்கான மீரிகம, கண்டி பிரதேசங்களில் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போது ஒரு விண்ணப்பதாரியின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கும் கட்டத்தில் உள்ளது. விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் குழுவில் இலங்கை முதலீட்டுச்சபை உறுப்பினர்களும் ஆயுள்வேத திணைக்கள அதிகாரிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். கஞ்சா பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோர் கஞ்சா எண்ணெய் உற்பத்தியிலும் ஈடுபடலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25,6)

## தப்பியோடிய சிப்பாய் ஐஸூடன் கைது

கொழும்பு, ஓக.27

இராணுவத்திலிருந்து தப்பியோடிய சிப்பாய் ஒருவர் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 9 மி.மீ பிஸ்டல் ரவைகளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார். கடந்த 20 ஆம் திகதி கட்டுப்பொத்த பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரின் வாகனத்துடன் இடம்பெற்ற விபத்தையடுத்து சந்தேகநபர் விசேட அதிரடிப்படை அதிகாரி மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச்சென்றிருந்தார். பின்னர் மினுவாங்கொட பிரதேசத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார். இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூன்று சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேகநபர்களை 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நாரம்மல நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (எ-25,6)

## இறைவரி அறவிடும் போலி ஆசாமிகள்

உள்நாட்டு இறைவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் என்ற போர்வையில் போலி ஆசாமிகள் நடமாடுகின்றனர் என்று உள்நாட்டு இறைவரித்திணைக்களம் அறிவித்துள்ளது. வரி நிலுவையாகவுள்ள வர்த்தக நிறுவனங்களுக்குச்செல்லும் இவர்கள் நிலுவையாக உள்ள வரிப்பணத்தை பணமாகவோ காசோலையாகவோ அறவிட்டு வருவதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் சந்திரசேகர தெரிவித்துள்ளார். எமது திணைக்களம் ஒரு போதும் பணமாகவோ காசோலையாகவோ வரிப் பணத்தை அறவிடுவதில்லை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வங்கிக்கணக்கிற்கே வரிப்பணம் வைப்பிலிடப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25,6)

## வரி விவரங்கள் வெளியிடப்படும்

*சியாம்பலாபிட்டிய தெரிவிப்பு*

வரி தொடர்பான அனைத்து தகவல்களும் வெளியிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். வரி நிலுவையை வசூலிப்பதற்காகச் சுமார் 900 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. முதல் வரி தொடர்பான அனைத்து தகவல்களும் ஊடகங்களுக்கு வெளியிடப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப் பிட்டிய தெரிவித்துள்ளார். (எ-இ)

## புலிகளை வென்றதால் மஹிந்தவுக்கு ஆதரவு!

*வீரசிங்க எம்.பி. கூறுகின்றார்*

கொழும்பு, ஓக.27

உலகிலேயே முப்படை பலத்தைக் கொண்டிருந்த புலிகள் அமைப்பை ஒழித்து, மக்கள் மத்தியில் இருந்த மரணப் பீதியை போக்கியதாலேயே மஹிந்த ராஜபக்சவை விட்டுச்செல்ல எனக்கு மனமில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் டீ. வீரசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது

புலிகள் அமைப்பு உலகில் பலம்பொருந்திய அமைப்பாக இருந்தது. தேச எல்லை இருந்தது. தரைப்படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் என அத்தனை படைகளும் இருந்தன. நீதிமன்றம் வங்கிக் கட்டமைப்பும் இருந்தது. இப்படிப்பட்ட அமைப்பை தோற்கடித்து, மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த மரண பீதியைப் போக்கி, புது வாழ்வு தந்தார். அதனால்தான் என்றும் அவர் பக்கம் நிற்கின்றேன். யார் போனாலும் நான் மஹிந்தவை விட்டுச் செல்லத் தயாரில்லை.

பொலிஸ், காணி அதிகாரம் வழங்கப்படமாட்டா, ஒற்றையாட்சி பாதுகாக்கப்படும் என்ற உறுதிமொழியை நாமல் வழங்கியுள்ளார். வேறு வேட்பாளர்கள் இந்த உறுதிமொழியை வழங்கவில்லை என்றார். (எ-44)

## தினம் தெரியுமோ?

**இப்ப கடைசியா பட்சி கம்பஸைப் பற்றிச் சொன்ன விசயங்களை வைச்சுக்கொண்டு 'ராக்கிங்கை பட்சி ஆதரிச்சுக் கதைக்குதோ?' எண்டு சிலர் போன் எடுத்துக் கேட்டவை. அவை மாதிரி வேற ஆக்களும் அப்பிடி நினைச்சிருக்கலாம். எப்பவும் பட்சி ராக்கிங்குக்கு எதிர்தான். கம்பஸ் பிள்ளையள்தான் 'இப்பிடி கம்பஸ் பெடியள் குடிச்சுப்போட்டு எப்ப பார்த்தாலும் கல்லாசனத்தில இருந்து ரவுடித்தனம் செய்யிறதை விட, ராக்கிங் இருந்தால் பரவாயில்லை' எண்டு தங்களுக்குள்ள கதைக்கினம். அவைக்கெண்டு இருக்கிற தனிப்பட்ட வட்ஸப் குரூப்புகளிலையும் இப்பிடி தங்கட ஆதங்கத்தை போட்டிருக்கினம். அதைத்தான் பட்சி சொன்னதே தவிர ராக்கிங்கை எப்போதைக்கும் பட்சி ஆதரிக்காது.**

**உந்தக் கல்லாசனம் காணாமல் போன சம்பவத்தில கன்னை பிரிஞ்சுபோய்க்கிடக்கிற மூண்டாம்வருசக்காரரோட மாணவர் ஒன்றியக்காரரும் மீட்டிங்க் போட்டுச் சொல்லியிருக்கினம். 'இது கம்பஸ் பிரச்சினை. கம்பஸுக்கெண்டு ஒரு மதிப்பு சனத்திட்ட இப்பவும் இருக்குது. அதைக்கெடுக்கிற மாதிரி ஆரும் நடக்கக்கூடாது. ஆர் அந்தக் கல்லாசனத்தை உடைச்சினமோ, அவையே கட்டிக் குடுக்கோணும் - எண்டு சொல்லியிருக்கினம். ஆனால் இன்னும் உறுதியான முடி வொண்டும் எடுபடேலை எண்டும் கேள்வி. பட்சி சொன்னமாதிரி கோயிலுக்குப் பக்கத்தில கல்லாசனத்தை திரும்பக் கட்டுறதில நிர்வாகத்துக்கு அவ்வளவு விருப்பமில்லை . ஏனெண்டால் அந்த இடத்தால தான் லைபிறரி, கன்ரீன் எண்டு கம்பஸ் பிள்ளையள் போய்வாறது. அந்த இடத்தில சென்றி போட்டமாதிரி குந்தி இருந்து குடிச்சு வெறிச்சபடி , கேளாக் கேள்வி கேக்கிற சிலரால பிள்ளையள் தெறிச்சு ஓடுதுகளாம். இப்ப இந்தக் கல்லாசனம் காணாமல் போன பிறகுதான் நிம்மதியா அவையள் போய் வரக்கூடியமாதிரி இருக்குதாம்.அதால கோயிலுக்கும், பொங்கு தமிழ்ப் பலகைக்கும் கிட்டவா இல்லாமல் ஆக்கள் அதிகம் புழங்காத இடத்தில அந்தக் கல்லாசனத்தைக் கட்டலாமெண்டதுதான் நிர்வாகத்தின்ர நிலைப்பாடா இருக்குமெண்டு தகவல்.**

**உந்தக் கல்லாசனத்தடியில பின்னேரங்களில ஓட்டோக்கள் நிக்கிறதெண்டு அண்டைக்கு பட்சி சொன்னதெல்லோ. அது வெளியாக்களின்ர ஓட்டோக்கள் இல்லை. கம்பஸ் பெடியளின்ர தானாம். ஆனால் ஓட்டோவில அவையள் உள்ளுக்க வாறதை இனியாவது நிர்வாகக்காரர் நிப்பாட்ட வேணும். செக்கியூரிட்டிமாரும் பெடியளோட வீணா எதுக்கு கொழுவல் எண்டு , கண்டும் காணாமல் இருக்கிறதும் அங்க போதைப் பாவனை கூடுறதுக்கு முக்கியமான காரணம். எல்லாரும் கொஞ்சம் கவனமா நடந்தாத்தான் எங்கட இளம் தலைமுறை சீரழியாமல் பாக்க முடியும். ஒருகாலத்தில தமிழினத்துக்கே வழி காட்டின பெடியளுக்கு இப்ப பட்சி மாதிரி கண்டவன் நிண்டவனெல்லாம் புத்திமதி சொல்ல வேண்டியதாப் போட்டுது பாருங்கோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 76 வருடகால சாபக்கேடு எமது ஆட்சியில் நீங்கும்

## தேசிய மக்கள் சக்தி உறுதிமொழி



**யாழ்ப்பாணம், ஓக.27**
**இலங்கை நாட்டின் 76 வருட காலமாக நாட்டைப் பீடித்துள்ள பிரபுகளின் ஆட்சிக்கு நாம் முடிவு கட்டுவோம். அதற்காக தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும்.**

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ். திருநெல்வேலிப் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரை அலுவலகத்தைத் திறந்துவைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் வாழுகின்ற தமிழ்- சிங்கள - முஸ்லிம் மக்களிடம் பல ஆண்டுகளாக ஏக்கம் இருக்கிறது. நாட்டைக் காப்பாற்ற சிறந்த தலைவர் வேண்டும்.

எழுபது வருடகாலமாக நாட்டை ஆட்சி செய்து சூறையாடிய திரு டர்களால் நாட்டை மீட்பதற்கு முடியவில்லை.


மீண்டும் தாய் நாட்டைத் திருடு வதற்கு பலர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற நிலையில் அதனை மக்கள் தமது வாக்குப் பலத்தால் முறியடிக்கவேண்டும்.

நாட்டை வழிநடத்த இலஞ்சம் ஊழலற்ற தலைவர் வேண்டுமென்ற மக்களின் எதிர்பார்ப்பை வெற்றிகொள்ளக்கூடிய ஒருவர் அநுரகுமார திஸாநாயக்கவே- என்றார்.

(ச-27,20)


## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 02 . 1946



மறைவு 26 . 08 . 2024

### நாகமுத்து பாலசிங்கம் (காந்தி)

காளிகோவிலடி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து பாலசிங்கம் (காந்தி) நேற்று (26.08.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - யோகேஸ்வரி மற்றும் கமலாவதி தம்பதியரின் மருமகனும், பத்மாவதியின் (பவானி) அன்புக் கணவரும், மயூரா, கோபிகிருஷ்ணா, மீரா, சுஜிகிருஷ்ணா ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகநாதன், யாழினி, சிவரூபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திவாகரன் - தீபிகா, ஆதீசன், அட்ஷயன், ஆருஷன், பிருத்விகா, பிரதிஷ்கா, அஸ்விந், யஸ்விந் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கணேஸ், தங்கம்மா, குமாரசாமி (பொன்னர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இரத்தினசிங்கம் (காந்தி), பத்மராணி, இராஜேஸ்வரி, ஜெயக்குமார், ஸ்ரீரங்கராணி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 436 9162
077 600 6526

காளிகோவிலடி,
மல்லாகம்.
(CR/42996) J-1



## தேடுகிறோம்

- பெயர் : வைத்திலிங்கம் சக்திவேலன்
- வயது : 78
- மனைவி பெயர் : பவா
- பிறந்த இடம் : தருமபுரம்
- 1960 தொடக்கம் 1968 வரை கொக்குவிலில் வசித்தார்.
- பிள்ளைகள் : 2

அவுஸ்ரேலியாவில் இருந்து தொடர்புகொள்ள விரும்புகின்றோம்:

தொடர்பு: .Dr.Tharmendra:
077 355 0940

(CS/55989) J-1



## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 03 . 1949



மறைவு 03 . 09 . 2018

எம்மையே நினைத்து எமக்காகவே வாழ்ந்த
அன்புத் தெய்வம் அப்பா!
**அமரர் இளையவி சின்னராசா**
*(ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்)*

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர் அனைவரும் போற்ற
வாழ்ந்து காட்டிய அப்பாவே-நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ-ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில் சுடர் விட்டுக்
கொண்டிருக்கும்
குலவிளக்கே அப்பா!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆறு ஆண்டுகள்
சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப்
பிரியாது

இன்று (27.08.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

39, அரசடி வீதி,
5 ஆம் ஒழுங்கை, நல்லூர்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்


CS 1219 V-1




தேசிய தொழில் முயற்சி அதிகாரசபையின் தென்மராட்சிப் பிரதேச பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான நவீன ஆபரணங்கள் உற்பத்தி பயிற்சி நெறி ஜே/300 சாவகச்சேரி நகர் கிராம அலுவலகத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது. திருமதி சத்திய நிதி கவிதா வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சிநெறியை முன்னெடுத்தார். (ச-25,9)


## கண்ணீர் அஞ்சலி

### திரு.பத்மநாதன் ஐங்கரன்



மலர்வு 28.07.1974
உதிர்வு 26.08.2024

எமது பிரதேச செயலக சமுர்த்தி மேற்கு வங்கியின் உதவி முகாமையாளர், யாழ் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் திரு. பத்மநாதன் ஐங்கரன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
பிரதேச செயலாளரும்
உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கமும்
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

(CS/56035) V-1



## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 19.09.1931
மறைவு 21.08.2003

**அமரர் பொன்னையா பாலசிங்கம்**
(Rtd. Superintendent of Audit)

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
வாழ்ந்து-எம்மை
அவனியிலே வாழ்வாங்கு வாழ
வைத்த-உம்மை
இருபத்தியோராம் ஆண்டு நினைவு நாளில்
நினைந்து வணங்குகின்றோம்-அப்பா!

166/2, சேர்பொன் இராமநாதன் வீதி
திருநெல்வேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 06 . 1998



மறைவு 28 . 08 . 2024

## சிவயோகபதி கௌதமன்

(பொதுச் சுகாதாரப் பரிசோதகர் -மொறட்டுவ)

யாழ்ப்பாணம், அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சிவயோகபதி கௌதமன் நேற்று முன்தினம் (25.08.2024) ஞாயிற்றுக்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் சிவயோகபதி - இராசமலர் தம்பதியரின் ஏக புதல்வனும், விந்தியா (அவுஸ்திரேலியா), டென்சியா, லக்சனா (மொரட்டுவ பல்கலைக் கழக தொழில்நுட்ப பீட மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிரிதரனின் அன்பு மைத்துனரும், தன்விகனின் தாய் மாமனும், சிவானந்தன், யோகமலர் ஆகியோரின் பெறாமகனும், சிவகுமரனின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2024) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் பத்தமேனியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீத்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பத்தமேனி, அச்சுவேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
077 8588 148
075 6412 855

# கத்திவெட்டில் கைதானோருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளரை கத்தியால் வெட்டி கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் இரண்டு சந்தேகநபர்களையும் எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் சிருவ ந்தன் பொன்னுத்துரை நேற்று உத்தரவிட்டார்.

கடந்த 21 ஆம் திகதி புதன்கிழமை இரவு 11 மணியளவில் நெல்லியடி நகரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையப் பணியாளர் மீது மோட்டார் சைக்கிள் வந்திருந்த இருவரில் ஒருவர் கத்தியால் கொடூரமாக வெட்டி படுகாயப்படுத்தப்பட்டிருந்தார். அங்கிருந்த சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் விசாரணை மேற்கொண்டு வந்த நெல்லியடிப் பொலிஸார் துன்னாலையைச் சேர்ந்த இருவரை கைது செய்து அவர்களுக்கு எதிராக கொலை முயற்சி ஈடுபட்டதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ் வழக்கு நேற்று திங்கட்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-100)

### பொன்னாலை

# வரதராஜப் பெருமாளுக்கு இன்று தேர்த் திருவிழா!

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலய ஆவணி மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா கிருஷ்ண ஜெயந்தி தின நன்னாளான இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் வரதராஜப் பெருமாள் சித்திரத் தேரில் ஆரோகணித்து அதனைத் தொடர்ந்து சித்திரத் தேர்ப் பவனி இடம் பெறும். இன்று பிற்பகல் 1 மணியளவில் உறியடி உற்சவம், பச்சை சாத்து தலைத் தொடர்ந்து பிற்பகல் 1.30 மணியளவில் சித்திரத் தேரிலிருந்து வரதராஜப் பெருமாள் அவரோகணம் செய்யும் திருக்காட்சியும் இடம்பெறுமென மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ம-66)

## ஆன்மீக அருளுரை

யாழ்., ஓக. 27

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழாக் காலத்தில் நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் ஆன்மீக அருளுரை வரிசையில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 8 மணியளவில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் 'அமைப்பு' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை ஆற்றவுள்ளார். (ம-66)

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 11 . 1971



மறைவு 23 . 08 . 2024

## தங்கவேல் கோபிநாதன் (கண்ணன்)

சூளானை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கவேல் கோபிநாதன் (கண்ணன்) அவர்கள் கடந்த 23.08.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கவேல் மற்றும் பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிதம்பரம் மற்றும் பவளம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவலோஜினியின் அன்புக் கணவரும், விஜிதா (விசி-கனடா), மேசிகா (பிரான்ஸ்), ரகுநாத் (பிரான்ஸ்), குகநாத் (கனடா) ஆகியோரின் சகோதரனும், பிரியதர்சன் (கனடா), கௌரிபாலன் (பிரான்ஸ்), வதனி (பிரான்ஸ்), அமுதா (கனடா), சித்திரா (கிளிநொச்சி), ரதி (கிளிநொச்சி), சேகர் (கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சூளானை, சுன்னாகம்.
Kugan - +16 4797 99363
Raku - +33 7586 78650
Meshi - +33 7660 56067
Visi - +64 7709 1426

தகவல்:
குடும்பத்தினர்.
077 080 5715

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 02 . 1939



மறைவு 26 . 08 . 2024

## சிதம்பரப்பிள்ளை அருணாசலம்

(ஓய்வுநிலை முகாமையாளர், சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கம்)

பறாளாய் வீதி, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் சுழிபுரம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை அருணாசலம் நேற்று (26.08.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் பாசமிகு புத்திரனும், சுந்தரம்பிள்ளை-அமிர்தம் தம்பதிகளின் பெறாமகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், முகுந்தன் (பொறியியலாளர்-அவுஸ்திரேலியா), சேந்தன் (விரிவுரையாளர் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி), அமிர்தகணேசன் (கணிய அளவியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிவேதிதா (பல் மருத்துவர் - அவுஸ்திரேலியா) இன் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, பொன்னம்மா, முருகவேல், கமலாதேவி, இராமச்சந்திரன் மற்றும் மீனாம்பாள் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், உமாதேவி, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஓவியா, சத்தியன் ஆகியோரின் அன்பு பேரனும், அம்பலவாணர் லக்சிகாவின் பாசமிகு அப்புவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

"முத்தகம்"
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்
077 356 4950
075 549 3469

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஆசிரியர்களை கண்டுகொள்ளாத அரசு!

யாழ்ப்பாணம், ஓக. 27

**நாட்டிலுள்ள சின்னஞ்சிறார்களுக்கு அடிப்படைக் கல்வியை வழங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்புப் பற்றியோ ஒரு சம்பளக் கட்டமைப்புப் பற்றியோ எவரும் கவனம் செலுத்தவில்லை என்று முன்பள்ளி ஆசிரியர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.**

இதுகுறித்து அவர்கள் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் நாட்டிலுள்ள ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பள உயர்வுடன் வாழ்க்கைச் செலவுப் படியும் 25,000 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக தற்போதைய ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்கள் உறுதிமொழி வழங்கி வருகிறார்கள். நாட்டிலுள்ள சிறார்களுக்கு ஆரம்ப அடிப்படைக் கல்வியை வழங்குவதில் முன்பள்ளி ஆசிரியர்கள் மிகமுக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பிரதேச செயலகங்கள் ஊடாக மிகக் குறைந்த வேதனமாக வெறும் 3 ஆயிரம் ரூபா மட்டுமே எமக்கு வழங்கப்பட்டுவருகின்றது. இதனால் பொருளாதார ரீதியில் பெரும் இடர்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே முன்பள்ளி ஆசிரியர்களையும் இலங்கை அரசு கருத்திலெடுத்து ஒரு சம்பளக் கட்டமைப்பை உருவாக்கவேண்டும் - என்றுள்ளது. (ச-இ)



அமிர்தலிங்கத்தின் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் பண்ணாகம், வலிகாமம் மேற்கு பிரதேசசபை வளாகத்தில் அமைந்துள்ள முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி கடந்த சனிக்கிழமை அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது தமிழகத்தின், திராவிடர் கழகத்தின் தலைவர் பி.வீரமணி, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் அமிர்தலிங்கம் அறக்கட்டளை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ச-25-27)

## கூட்டுறவு தினவிழா நாளை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபையின் ஏற்பாட்டில் 102 ஆவது சர்வதேச கூட்டுறவுதினவிழா யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் க.மகாதேவன் தலைமையில் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் புதன் கிழமை மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை பணிப்பாளர் ஜி.டி.சரத்வீரசிறி, சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவருமான ந.திருலிங்கநாதன், கௌரவ விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஸ்ரீ சற்குணராசா சிறப்புரையாற்றுவார். அனைவரையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25)

## காத்திரமான பேச்சுக்கு அழைப்பின் ஆராய்வோம்

*சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக.27


தென்பகுதி வேட்பாளர்கள் காத்திரமான பேச்சுக்கு அழைத்தால் அது தொடர்பில் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் வவுனியாவில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதித் தேர்தல், தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்திய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

வடக்கு - கிழக்கில் பரப்புரை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தனது முழுமையான பங்களிப்பை வழங்கும். எதிர்காலத்தில் காத்திரமான பேச்சுக்கு வேட்பாளர்கள் வருவார்களாக இருந்தால் அது தொடர்பில் நாம் கூடி ஆராய்ந்து முடிவுகளை எடுப்போம் - என்றார். (ச-18)



## குளங்களைப் பாதுகாக்க எல்லைக்கல் அமைக்குக

கிளிநொச்சி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஓக.27

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான குளங்களை பாதுகாக்கும் பொருட்டு அவற்றுக்கு எல்லைக்கற்கள் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கிளிநொச்சி மக்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

எல்லைக்கற்கள் கொள்வனவு செய்யப்பட்டு தயாராக உள்ளபோதும் குளங்களுக்கு எல்லையிடுவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் அருகிச் செல்லும் நிலத்தடி நீரையும் இல்லாது செய்துவிடும்.

எனவே இது குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, குளங்களைப் பாதுகாக்கவேண்டும் - என்றனர். (ச-25-214 - 52)





## பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி, ஓக.27

கிளிநொச்சி வடக்கு வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நாடகப் பயிற்சிப் பட்டறை வடக்கு - கிழக்கு மறுவாழ்வு மையத்தின் அனுசரணையில் கிளிநொச்சி தருமபுரம் இல.1 அ.த.க. பாடசாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி வடக்கு வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.விஜயநாதன், கிளிநொச்சி மத்திய கல்லூரியின் உப அதிபர் ப.சசிறதன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். (ச-45-13)

## முன்பள்ளி விளையாட்டு விழா

கிளிநொச்சி, ஓக.27

கிளிநொச்சி, பரந்தன் டாக்டர் சாம் முன்பள்ளியின் விளையாட்டு விழா சாம் முன்பள்ளித் தலைவர் இந்திராணி ஜெகராசா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி வடக்கு வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் பொ.விஜயநாதன், கிளிநொச்சி இந்து மகா வித்தியாலய அதிபர் நா.நடேஸ்வரமூர்த்தி, கிராம அலுவலர் திருமதி சுகந்தினி விஜயகுமார், ஏழ்மைக்கு கை கொடுக்கும் உறவுகள் அமைப்பின் தலைவி திருமதி சுஜாதா சசிகுமார், முன்பள்ளியின் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பரம்பலை...

தேசியமக்கள்சக்தியின்தேர்தல்அறிக்கை, அந்தக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவால் நேற்று வெளியிடப்பட்டது.

அதில் முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளிட்ட அடக்குமுறை சார்ந்த சட்டங்கள் இல்லாதொழிக்கப்பட்டு அனைத்து மக்களினதும் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும்.

வடக்கு - கிழக்கு உட்பட ஏனைய பிரதேசங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் காணாமற்போகச் செய்வித்தல்கள் மற்றும் ஆட்கடத்தல்கள் பற்றி விசாரணை நடத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்படும்.

தற்போது காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைகள் மற்று உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை ஒரு வருடத்துக்குள் நடத்தி மக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

சட்டரீதியான அதிகாரங்களைக் கொண்ட பாரபட்சத்துக்கு எதிரான ஆணைக்குழு உருவாக்கப்படும்.

இனவாதம் மற்றும் மதத் தீவிரவாதம் காரணமாக இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களை புலன்விசாரணை செய்வதற்கான உண்மை மற்றும் மீளிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் செயற்பாடு விரிவாக்கப்படும்.

மதங்களுக்கிடையிலான மோதல்களைத் தீர்த்துவைப்பதற்கான அனைத்து மதத் தலைவர்களையும் மதம்சார்ந்த கல்விமான்களினதும் உள்ளடக்கத்துடனான சர்வ மதப் பேரவை உருவாக்கப்படும்.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களிலும் மக்களது சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான சிவில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படும்.

கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் அரசியல் அழுத்தங்களின்றி சகல இனத்தவர்களுக்கும் நியாயமானவகையில் கிடைக்கக் கூடியதாக தகைமைகளின் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதை உறுதிசெய்யப்படும்.

மானிய உதவிகள் மற்றும் பாதுகாப்பு அவசியமாகும். யுத்த விதவைகள், அநாதைகள் மற்றும் மன அழுத்தங்களுக்கு ஆளானவர்களுக்கான மானிய உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

காணிகள் மற்றும் வாழ்விடங்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு ஒன்றினூடாக நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்.

இனக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும் மக்கள் குடியேற்றங்களை நிறுத்துதல்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கூடுதலாக வாழ்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள், அரச அலுவலகம் போன்ற சிவில் சேவைகள் நிலவும் இடங்களில் தமிழ் மொழியில் பணிகளை ஆற்றக்கூடியதாக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல்.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களின் கடற்றொழில் நடவடிக்கைகளில் வெளிநாட்டு மீனவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சவால்களை இராஜதந்திர ரீதியாகத் தீர்த்து. அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளையும் விற்பனை வசதிகளுக்கான வாய்ப்புகளையும் உருவாக்குதல்" என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. (அ-ஒ-44)

## நல்லாட்சிக்...

வாக நிறைவுசெய்து எமது நாட்டின் அனைத்து மக்களதும் உரிமைகளை ஏற்றுக்கொள்கின்ற புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தனது தேர்தல் அறிக்கையை கொழும்பில் நேற்று வெளியிட்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எமது நாட்டில் நீண்டகாலமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியாமற்போயுள்ளது. எமது நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் கட்டமைப்புமே அடுத்தவருக்கு எதிரானதாகவே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. தெற்கிற்கு எதிராக வடக்கின் அரசியலும் வடக்குக்கு எதிராக தெற்கின் அரசியலும் முஸ்லிம்களுக்கு எதிரான சிங்கள அரசியலும் சிங்களவர்களுக்கு எதிரான முஸ்லிம் அரசியலும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

எமது நாட்டின் அரசியல் என்பது பிறருக்கு எதிரான அரசியலாகும். அத்தகைய அரசியலால் ஒருபோதுமே ஒற்றுமையை நிறுவ முடியாது. ஒற்றுமையை ஏற்படுத்துதல் சட்டத்தின் வாசகங்களுக்குள்ளே சட்டத்தின் பிரிவுகளுக்குள்ளே உரிமைகளுக்குள்ளே மாத்திரம் இருப்பதொன்றல்ல. ஒற்றுமையை உருவாக்குவதற்கான பிரதான காரணி அரசியலுக்குள்ளே நிலவுகின்றது என நாங்கள் நினைக்கிறோம். ஏனைய காரணிகளையும் நாங்கள் நிறைவு செய்ய வேண்டும். பிரதான பங்கு அரசியலில் தான் இருக்கிறது.

ஒட்டுமொத்த அரசியலுமே மற்றவருக்கு எதிரான அரசியல் என்றால் அத்தகைய அரசியலால் மற்றவரின் நன்மதிப்பு மற்றவரின் பெறுமதி மற்றவரின் பாதுகாப்புக் கொண்ட தேசத்தை உருவாக்கிவிட முடியாது. எனவே நாங்கள் முதல் முதலில் செய்வது தேசிய மக்கள் சக்தியின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் மற்றவருக்கு எதிரான அரசியலுக்குப் பதிலாக ஒற்றுமையின் அரசியல்தான் நிலவும்.

தமிழ்மொழி, சிங்கள மொழி பேசுகின்ற மக்களுக்குத் தமது மொழியில் தமது அரசுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதற்கான உரிமையை நாங்கள் யதார்த்தபூர்வமானதாக்குவோம். அரசமைப்பில் அது இருக்கிறது. தமிழ்ப் பிரஜையொருவர் தமது மொழியில் அரசுக்குக் கடிதமொன்றை அனுப்பினால் அரசிடமிருந்து அதே மொழியில் பதில் கிடைக்கவேண்டும். பொலிஸுக்குச் சென்று தமிழ்மொழி பேசுகின்ற பிரஜையொருவர் தனது மொழியில் முறைப்பாட்டைச் செய்வதற்கான உரிமை இருக்கவேண்டும். எனவே மொழிக்கான உரிமை அரசமைப்பின் உறுப்புரைக்குள் மாத்திரம் இருந்துவிட்டால் போதாது. அதனை யதார்த்தமாக நிலைநாட்டுவதற்கான வேலைத்திட்டத்தைக் கொண்டதாக எங்களுடைய முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன" - என்றார். (அ-ஒ-இ)

## நிறைவேற்று...

அத்துடன், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 25 ஆகவும், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 25 ஆகவும் அமையும் என்றும், இராஜாங்க அமைச்சர்கள் என்ற விடயம் இல்லாது செய்யப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. 'வளமான நாடு: அழகான வாழ்க்கை' எனும் தலைப்பின்கீழ் 233 பக்கங்களில் அமைந்துள்ள தேர்தல் அறிக்கையில் புதிய அரசமைப்பு குறித்து வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் வருமாறு:-

"புதிய அரசியலமைப்பொன்றுக்கான வரைவுதயாரிக்கப்படுவதோடு, அது பொது மக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு உரையாடலுக்கு இலக்காக்கப்பட்ட பின்னர் அவசியமான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு, மக்கள் கருத்துக் கணிப்பில் அங்கீகரித்துக் (சர்வஜன வாக்கெடுப்பு) கொள்ளப்படும்.

தொழிலுக்காக நாட்டுக்குள்ளேயும் நாட்டுக்கு வெளியிலும் புலம்பெயர்ந்துள்ள ஆட்களின் வாக்களிக்கின்ற உரிமை உறுதி செய்யப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி அரசமைப்பை ஒழித்துக் கட்டி நாடாளுமன்ற ஆளுகை நிலைநாட்டப்படும். நிறைவேற்று அதிகாரமற்ற ஜனாதிபதியொருவர் நியமிக்கப்படுவார்.

புதிய நாடாளுமன்றத் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்படும்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை ஒன்றாக மட்டுப்படுத்தப்படும்.

ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளுக்கும் அவர்களின் வாழ்க்கைத்துணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதியம், விசேட கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் இல்லாதொழிக்கப்படும்.

விஞ்ஞான ரீதியாக ஒதுக்கப்பட்ட 25 அமைச்சுகளுக்கு 25 அமைச்சர்களையும் 25 நேரொத்த பிரதியமைச்சர்களையும் நியமிக்கும் நடவடிக்கை இடம்பெறும். ஒவ்வொரு அமைச்சுக்கும் விடயத்துறை பற்றிய சிறப்பறிஞர்களைக் கொண்ட மதியுரை சபை நிறுவப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது பொறுப்புகளை ஈடேற்றாவிட்டால் அத்துடன் ஊழலில் ஈடுபடுவார்களாயின் அவர்களைத் திருப்பியழைப்பதற்கான அதிகாரம் வாக்காளர்களுக்குக் கிடைக்கின்ற ஏற்பாடுகள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக பணியாட்தொகுதிக்காக குடும்ப உறவினர்களைச் சேர்த்துக்கொள்ளாமை போன்ற விதிமுறைகளை உள்ளடக்கிய ஒழுக்கநெறிக்கோவையொன்று அறிமுகப்படுத்தப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட்டத்தொடரில் பற்கேற்பதற்காகச் செலுத்துகின்ற கட்டணம் இல்லாது செய்யப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 வருடங்களுக்குப் பின்னர் செலுத்தப்படுகின்ற ஓய்வூதியம் இல்லாது செய்யப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுங்கத் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத் திட்டம் நீக்கப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினரின் பதவிக்காலத்தில் ஒரு வாகனம் மாத்திரம் வழங்கப்படும்" -என்றுள்ளது. (அ-ஒ-44)

## ஓட்டோ...

தனியார் வகுப்புக்குச் சென்ற தனது மகனை அழைத்துச் சென்றபோது, பிறவுண் வீதியில் எதிரே வந்த ஓட்டோ மோதியதில் அவர் படுகாயமடைந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று அதிகாலை சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உதவி முகாமையாளராகவும், யாழ்.மாவட்டச் சமுர்த்தி ஊழியர் சங்கத் தலைவராகவும் பதவிவகித்து வந்த பத்மநாதன் ஐங்கரன் தீவகம் லயன்ஸ் கழகத்தின் தற்போதைய தலைவரும், யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவருமாவார்.

விபத்துத் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-66)

## வளர்ப்புநாய்...

ஜூலை மாதம் 24 ஆம் திகதி அவரை வளர்ப்பு நாய் கடித்துள்ளது. எனினும் அவர் சிகிச்சைக்குச் செல்லவில்லை. இதையடுத்து கடந்த 13 ஆம் திகதி அவருக்கு உடல் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். கிருமித் தொற்றுக் காரணமாகவே உயிரிழப்புச் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தீக்காயங்களுடன்...

அசம்பாவிதம் நேர்ந்துள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

திருமணமாகி 10 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் குடும்பப் பெண்ணுக்கும் அவரது கணவருக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவி வந்ததாக அயலவர்கள் குறிப்பிடுகின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் கணவன் மதுபோதையில் வீட்டுக்கு வந்ததாகவும், மனைவியுடன் முரண்பட்டு அவரை அறையில் அடைத்துவிட்டு தீ மூட்டியதாகவும் பொலிஸார் தமது விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். காயமடைந்த பெண் அயலவர்களால் மீட்கப்பட்டு அச்சுவேலிப் பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (அ-ஒ-20)

## தமிழ்ப்...

வருகின்ற அழைப்புகளை ஏற்பதா இல்லையா என்பதை ஒருமித்து முடிவெடுப்பது, வடகிழக்கில் தேர்தல் பரப்புரைகளை முழுவீச்சில் முன்னெடுப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - இந்தத் தீர்மானங்கள் அனைத்தையும் தேர்தல் காலம் முடியும் வரையில் அரசியல் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற வடக்கு - கிழக்கில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட அதன் பிரதிநிதிகள் சிவில் சமூகத்தினர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவின் பதினெட்டாம் நாள் திருவிழாவான கார்த்திகை உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை சிறப்பாக இடம்பெற்றது. (ம-100,66)

# 156 மருந்துகளுக்கு இந்தியாவில் தடை

புதுடில்லி, ஓக. 27

இந்தியாவில் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும் 156 மருந்துகளைத் தடை செய்ய இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த மருந்துகளின் பயன்பாடு மனித உடலுக்குப் பாதகமான அபாயங்களை ஏற்படுத்தும் என்று ஆய்வுகளில் தெரியவந்துள்ள நிலையில் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி குறித்த மருந்துகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகம் ஆகியவற்றுக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. (ச-இ)

# வரலாறுகளை அறியாதோரே பொதுவேட்பாளருக்கு எதிர்ப்பு

## சிவாஜிலிங்கம் காட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 27

சுமந்திரனின் எடுபிடியாகவும், வாலாகவுமே சாணக்கியன் செயற்படுகின்றார். நான் சாணக்கியனை பார்த்துக் கேட்கிறேன் சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? சுயநிர்ணய உரிமையை எப்படிப் பாவிப்பது தெரியுமா?

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமாகிய எம்.கே.சிவாஜிலிங்கம் காட்டம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் 'பொதுவேட்பாளர்' ஒரு தேவையற்ற விடயம் என்றும் அதனை ஒரு சிலர் தூக்கிப்பிடித்துக் கொண்டு திரிகின்றார்கள் எனவும் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். சாணக்கியனுக்கு தற்போது 60 கோடி கொடுக்கப்பட்டுள்ள பின்னணியில் அவர் அந்தக் கருத்தை வெளியிட்டிருக்கலாம்.

இனப்படுகொலை இடம்பெற்றது, அதற்கு சர்வதேச நீதி வேண்டும் எனப் போராடி வருகின்றோம். திரும்பவும் அடி வேண்டிக்கொண்டு இருக்கமுடியாது. எங்களுக்கு என்ன தேவை என்பதை நாங்கள் கேட்டால்தான் மற்றவர்கள் எங்களுக்கு உதவ முன்வருவார்கள்.

13 குறைந்து மைனஸில் சென்றுகொண்டிருக்கிறது. ஏமாறு வதற்கும் ஓர் அளவுவேண்டும். இதனை அவர்கள் எப்போது புரிந்துகொள்ளப்போகின்றார்கள். எல்லோரும் தமிழரை நாசமாக்கி வருகின்றார்கள்.

எவர் வந்தாலும் நாங்கள் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கின்றோம் என்பதை உலகுக்குக் காட்டுகின்றமை நல்லதொரு விடயம் – என்றார். (ச-27)

# நல்லூரில் இன்று குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், ஓக. 27

யாழ்.மாவட்டத் திரிசாரணர் குழாமினால் ஏற்பாடு செய்யப்பட்ட குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள மயிலூரான் அரங்கத்தில் இடம்பெறவுள்ளது. (ம-66)

## விபத்தில்...

(வயது-69) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சைக்கிளில் பயணித்த அவரை, வீதியின் நடுப்பகுதியில் வைத்து காரொன்று மோதித்தள்ளியுள்ளது. படுகாயங்களுக்கு உள்ளான முதியவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின் போது நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம் குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## கொழும்புத்...

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் அமெரிக்கப் போர்க் கப்பல்கள் இலங்கைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தன. அதன் பின்னர் இந்தியப் போர்க் கப்பல் நங்கூரமிட்டது. தற்போதுவரை அந்தப் போர்க் கப்பல் இலங்கையிலேயே

நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் நிலையில், சீனாவின் மூன்று போர்க் கப்பல்களும் இலங்கையின் கடற்பரப்புக்குள் நுழைந்துள்ளமை பிராந்திய கடற்பதற்றம் உச்சம் பெறுவதைக் காட்டுவதாக சர்வதேச அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் மீள்நிரப்புகை, மாலுமிகளுக்கான ஓய்வு மற்றும் இருதரப்பு உறவை மேம்படுத்தல் ஆகிய காரணங்களுக்காகவே சீனாவின் கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - சீன கடற்படையினரின் கூட்டிணைவில் பயிற்சி நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன என்றும், எதிர்வரும் 29ஆம் திகதிவரை சீனக் கப்பல்கள் இலங்கையில் தரித்து நிற்கும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## சுவிஸிலிருந்து...

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் அவர் தங்கியிருந்தபோதே அவர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 60 வயதுடைய ஒருவர் சந்தேகநபராகக் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-110)


## தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய பெண் பராமரிப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் தேவை. வயதெல்லை (25-40)

**பராமரிப்பாளர்:** க.பொ.த (சா/த) பூர்த்தி செய்துள்ளதுடன் க.பொ.த (உ/த) கற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:

077 711 2269, 077 361 1301

## காணி விற்பனைக்கு

கோப்பாய் உரும்பிராய் பிரதான வீதியில் இருந்து 150m தூரத்தில் 3 1/2 பரப்பு காணி நன்னீர் வசதியுடன் நல்ல அயற் சூழலில் விற்பனைக்கு

T.Kanna

தொடர்பு: 077 880 3185

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில்**

**172 நிலப்பரப்புக்காணி விற்பனைக்குண்டு**

- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna College 1Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி, 500 M, தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)

077 294 1521, 077 288 0152, 076 755 8606

(CS 1221) V-1




## வேலைவாய்ப்பு

பலசரக்கு வியாபார நிலையங்களுக்கு ஊழியர்கள் தேவை.

1. விற்பனையாளர்.
2. சிட்டை தயாரிப்பாளர்.
3. உதவியாளர்.

காங்கேசன் துறை, சாவகச்சேரி மற்றும் தீவகம் பகுதிகளுக்கு.
வயது எல்லை - 18 தொடக்கம் 60 வயது - ஆண்கள் மட்டும்.
முன் அனுபவம் இருப்பின் நன்று.
உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்.
சம்பளம் பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 077 230 4713.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.